செ.வெ.எண்.35 நாள்.19.01.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் உணவு பாதுகாப்பு மாவட்ட வழிகாட்டுதல் கூட்டம் மற்றும் பால் வழிகாட்டுதல் குழு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் உணவு பாதுகாப்பு மாவட்ட வழிகாட்டுதல் கூட்டம் மற்றும் பால் வழிகாட்டுதல் குழு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (19.01.2018) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து உணவு வணிகர்களும் ஆண்டிற்கு ரூ.12 இலட்சத்திற்கு மேல் விற்பனையாகும் ஹோட்டல் உரிமையாளர்கள் மாநிலம் உரிமம் பெற்றும், ரூ.12 இலட்சத்திற்கு குறைவாக விற்பனையாகும் ஹோட்டல் உரிமையாளர்கள் பதிவு சான்று பெற்றும் உணவகங்களை நடத்திட வேண்டும். உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெறாதவர்கள் உணவு தொழில் புரிவதற்கு 05.08.2011 முதல் ஆறு வருடங்களாக பதிவு/உரிமம் பெற கால அவகாசம் அளிக்கப்பட்டது. இந்த அவகாசம் 31.01.2018க்குள் பதிவு/உரிமம் பெற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, உணவு தொழில் புரிவோர் இம்மாத இறுதிக்குள் அருகிலுள்ள பொது சேவை மையம் அல்லது தங்கள் பகுதி உணவு பாதுகாப்பு அலுவலரை அணுகி, பதிவு/உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. பொதுமக்கள் உணவு பாதுகாப்பு தொடர்பான புகார்களுக்கு 94440 42322 என்ற வாட்ஸ் ஆப் எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம். இப்புகார்களின் மீது 24 மணி நேரத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உணவு வணிகர்கள் மறு சுழற்சிக்கு பயன்படாத 50 மைக்ரான் அளவிற்கு கீழுள்ள பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக் கூடாது. 50 மைக்ரான் அளவிற்கு கீழுள்ள பிளாஸ்டிக் பைகளை விற்பனை செய்பவர்கள் மீது அலுவலர்கள் மூலம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பால் உற்பத்தியாளர்கள் பாலின் தரம் மற்றும் பால் பாக்கெட்டுகளில் கடைபிடிக்க வேண்டிய லேபிள் விவரங்களை கையாள வேண்டும். உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அதிகளவில் பால் உணவு மாதிரிகளை எடுத்து, பரிசோதிக்க வேண்டும். தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்திய அளவில் 500 நகரங்கள் தரவரிசை பட்டியிலிடப்படுகிறது. நமது மாநகராட்சி இப்பட்டியலில் முதன்மை பெறும் வகையில் தூய்மையை பராமரிக்க வணிகர்களும் முன்வர வேண்டும். திடக்கழிவு மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து, மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை பிரித்து கையாள வேண்டும். அரசின் விதிமுறைகளை பின்பற்றி உணவு தொழிலை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மரு.செந்தில்குமார், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், வழிகாட்டு குழு உறுப்பினர்கள் தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்புத் தலைவர் திரு.சின்னத்துரை, தென்காசி அல் ஆசிக் டிரேடர்ஸ் திரு.முஸ்தபா நாஸர், திருநெல்வேலி ஹோட்டல் சங்க பொருளாளர் திரு.மணிகண்டன், எப்இடிசிஒடி தலைவர் திரு.வெங்கடாச்சலம் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள், நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.